கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

## பட்டு வளர்ச்சித்துறை

# மக்கள் சாசனம்

**2010**

©
தமிழ்நாடு அரசு
2010

# பட்டு வளர்ச்சித்துறை

# மக்கள் சாசனம் : 2010

மல்பரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்புத்தொழில், வேலை வாய்ப்பினை உருவாக்கித் தருவதுடன் பட்டுக்கூடு அறுவடையின் மூலம் தொடர் வருவாயையும் பெற்றுத் தருகிறது. பட்டு விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்த, பட்டு வளர்ச்சித்துறையின் வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு அரசு தொடர்ந்து உதவிகளை வழங்கும்.

- உயர் விளைச்சல் தரும் மல்பரி ரகங்களை சாகுபடி செய்ய விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவர்.
- இருசுழற்சியின புழுவளர்ப்பினை மேற்கொள்ள விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவர்.
- தண்டு அறுவடைமுறை புழுவளர்ப்புத் தாங்கிகள் மூலம் புழுவளர்ப்பு மேற்கொள்ள விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவர்.
- தனியாக புழுவளர்ப்பு மனை கட்டவும், நவீன புழுவளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்யவும் விவசாயிகளுக்கு உதவி அளிக்கப்படும்.
- மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் / தெளிப்பு நீர்ப்பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு உதவி அளிக்கப்படும்.
- இளம்புழு வளர்ப்பு மனை அமைக்கவும், தளவாடங்கள் கொள்முதல் செய்யவும் விவசாயிகளுக்கு உதவி அளிக்கப்படும்.
- பட்டுப் புழுவளர்ப்பு, தளவாடங்கள் மற்றும் மனைக்கான காப்பீடு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு உதவி அளிக்கப்படும்.
- பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் உடல் நலக்காப்பீடு அளிக்கப்படும்.
- பலமுனை நூற்பு இயந்திரம் நிறுவ நூற்பாளர்களுக்கு உதவி அளிக்கப்படும்.
- தானியங்கி பட்டு நூற்பாலை அமைக்க பட்டு நூற்பாளர்களுக்கு உதவி அளிக்கப்படும்.
- பட்டு முறுக்கேற்றும் அலகு அமைக்க பட்டு நூற்பாளர்களுக்கு உதவி அளிக்கப்படும்.
- இரு சுழற்சியின பட்டு நூல் உற்பத்திச் செய்யும் பட்டு நூற்பாளர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும்.

- பட்டு கைத்தறிகளை மேம்படுத்த பட்டு கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி அளிக்கப்படும்.
- பட்டு நூல் சாயமேற்றுதல் மற்றும் ஆடைகள் தயாரிப்பு பணிகளுக்கு உதவி அளிக்கப்படும்.

பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள உதவிகள் விபரம் பின்வருமாறு :

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட உட்பிரிவுகள் | ஒரு பயனாளிக்கு உதவி (ரூ.) | பயன் பெற தகுதியுள்ள –வர்கள் | அணுக வேண்டியவர் கள் | விண்ணப் பிக்க வேண்டிய காலம் | விண்ணப் பத்தை பரிசீலிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| அ | கிரியா ஊக்கித் திட்டம் | (1) மல்பரி நடவு மானியம் | 4,125 ஒரு ஏக்கருக்கு | பட்டு விவசாயிகள் | உதவி ஆய்வாளர்/ ஆய்வாளர்/ உதவி இயக்குநர் | மல்பரி நடவிற்கு பின் ஒரு மாதம் | நிதி இருப்புக்கு ஏற்ப இரண்டு மாதத்தில் |
| | | (2) விவசாயிகளு க்கு புழு வளர்ப்புப் பயிற்சி | 5,000 | பட்டு விவசாயிகள் | உதவி ஆய்வாளர்/ ஆய்வாளர்/ உதவி இயக்குநர் | மல்பரி நடவிற்கு பின் | நிதி இருப்புக்கு ஏற்ப இரண்டு மாதத்தில் |
| | | (3) சொட்டு / தெளிப்பு நீர்ப்பாசன அமைப்பு நிறுவுதல் | 15,000 ஒரு ஏக்கருக்கு | பட்டு விவசாயிகள் | உதவி ஆய்வாளர்/ ஆய்வாளர்/ உதவி இயக்குநர் | மல்பரி நடவிற்கு பின் ஒரு மாதம் | நிதி இருப்புக்கு ஏற்ப இரண்டு மாதத்தில் |
| | | (4) தனியாக புழு வளர்ப்பு மனை அமைத்தல் | <u>நிலை 1</u> 75,000<br><u>நிலை 2</u> 50,000<br><u>நிலை 3</u> 27,500 | பட்டு விவசாயிகள் | உதவி ஆய்வாளர்/ ஆய்வாளர்/ உதவி இயக்குநர் | மல்பரி நடவிற்குப் பின் ஒரு மாதம் | நிதி இருப்புக்கு ஏற்ப இரண்டு மாதத்தில் |
| | | (5) நவீன புழுவளர்ப்பு தளவாடங்கள் கொள்முதல் | 30,000 | பட்டு விவசாயிகள் | உதவி ஆய்வாளர்/ ஆய்வாளர்/ உதவி இயக்குநர் | தனியாக புழு வளர்ப்பு மனை அமைத்த பின் ஒரு மாதம் | நிதி இருப்புக்கு ஏற்ப இரண்டு மாதத்தில் |
| | | (6) இளம் புழு வளர்ப்பு மையம் அமைத்தல் | 1,72,500 | பழைய பட்டு விவசாயிகள் | உதவி ஆய்வாளர்/ஆ ய்வாளர்/ உதவி இயக்குநர் | இளம்புழு வளர்ப்பு மையம் அமைத்த பின் | நிதி இருப்புக்கு ஏற்ப இரண்டு மாதத்தில் |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட உட்பிரிவுகள் | ஒரு பயனாளிக்கு உதவி (ரூ.) | பயன் பெற தகுதியுள்ள –வர்கள் | அணுக வேண்டியவர் கள் | விண்ணப் பிக்க வேண்டிய காலம் | விண்ணப் பத்தை பரிசீலிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | கிரியா ஊக்கித் திட்டம்....... | (7) பட்டுப் புழுவளர்ப்பு தள வாடங்கள் மற்றும் மனைக்கான காப்பீடு திட்டம் | 100 கலப்பின முட்டைத் தொகுதி–களுக்கு ரூ.329/– <br> 100 இருசுழற்சியின முட்டைத் தொகுதி–களுக்கு ரூ.463/– | பட்டுப்புழு வளர்ப்பு மேற் கொள்ளும் விவசாயிகள் | உதவி ஆய்வாளர்/ ஆய்வாளர்/ உதவி இயக்குநர் | கூடுமானவரை பட்டு முட்டைத் தொகுதிகள் கொள்முதல் செய்யும் பொழுது | நிதி இருப்புக்கு ஏற்ப இரண்டு மாதத்தில் |
| | | (8) மகளிர் பட்டு விவசாயிகள் தொழிலாளர்கள் மற்றும் அவர் தம் குடும்பத்தின–ருக்கும் உடல் நலக்காப்பீட்டுத்திட்டம் | வருடாந்திர காப்பீட்டுத் தொகை ரூ.15,000/– வரை | மகளிர் பட்டு விவசாயிகள் / தொழிலாளர்கள் | உதவி இயக்குநர் | கூடுமான வரை நிதி–யாண்டின் ஆரம்பத்தில் | நிதி இருப்புக்கு ஏற்ப இரண்டு மாதத்தில் |
| | | (9) பலமுனை பட்டு நூற்பு அலகு அமைத்தல் | 7,50,000 | நூற்பாளர்கள் | சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர் | கூடுமானவரை நிதியாண்டின் ஆரம்பத்தில் | நிதி இருப்புக்கு ஏற்ப இரண்டு மாதத்தில் |
| | | (10) தானியங்கி பட்டு நூற்பாலை அமைத்தல் | 65,00,000 | நூற்பாளர்கள் | சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர் | கூடுமானவரை நிதியாண்டின் ஆரம்பத்தில் | நிதி இருப்புக்கு ஏற்ப இரண்டு மாதத்தில் |
| | | (11) பட்டு முறுக்கேற்றும் அலகு அமைத்தல் | 4,50,000 | நூற்பாளர்கள் | சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர் | கூடுமானவரை நிதியாண்டின் ஆரம்பத்தில் | நிதி இருப்புக்கு ஏற்ப இரண்டு மாதத்தில் |
| | | (12) பட்டு நூற்பாளர் களுக்கு ஊக்குவிப்பு தொகை அளித்தல் | கிலோவிற்கு ரூ.100 வீதம் | பலமுனை மற்றும் தானியங்கி பட்டு நூற்பாளர்கள் | உதவி ஆய்வாளர்/ ஆய்வாளர்/ உதவி இயக்குநர் | பட்டு நூல் விற்பனை செய்த பின் | நிதி இருப்புக்கு ஏற்ப இரண்டு மாதத்தில் |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட உட்பிரிவுகள் | ஒரு பயனாளிக்கு உதவி (ரூ.) | பயன் பெற தகுதியுள்ள –வர்கள் | அணுக வேண்டியவர் கள் | விண்ணப் பிக்க வேண்டிய காலம் | விண்ணப் பத்தை பரிசீலிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | கிரியா ஊக்கித் திட்டம்....... | (13) பட்டு கைத்தறி களை மேம் படுத்துதல் | 10,000 (ஒரு தறிக்கு) | பட்டு நெசவாளர் கள் | சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர் / துணை இயக்குநர், பட்டு பதனிடுதல் மற்றும் பரிசோதனை மையம், காஞ்சிபுரம் | கூடுமானவ ரை நிதியாண்டி ன் ஆரம்பத்தில் | நிதி இருப்புக்கு ஏற்ப இரண்டு மாதத்தில் |
| | | (14) பட்டு நூல் சாயமேற்றுத ல் மற்றும் ஆடைகள் தயாரிப்பு பணிகளுக் கு உதவியளித் தல் | 2,25,000 | தொழில் முனைவோர் | சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர்/ துணை இயக்குநர், பட்டு பதனிடுதல் மற்றும் பரிசோதனை மையம், காஞ்சிபுரம் | கூடுமானவ ரை நிதியாண்டி ன் ஆரம்பத்தில் | நிதி இருப்புக்கு ஏற்ப இரண்டு மாதத்தில் |
| ஆ | அனைத்து தொழில் நுட்ப உதவிகள் | முட்டைத் தொகுதிகள் விநியோகம் | முட்டைத் தொகுதிகளுக் –கான தொகை செலுத்திய பின் | பட்டு விவசாயிகள் | இளநிலை ஆய்வாளர் / உதவி ஆய்வாளர் / ஆய்வாளர்/ உதவி இயக்குநர் | புழு வளர்ப்பு மேற்கொள் வதற்கு மூன்று வாரத்திற்கு முன் | முட்டைத் தேவை விபரம் பெற்ற 15 நாட்களுக் குள் |